**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு ஜூலை திங்கள் 25 ஆம் நாள் வியாழக்கிழமை
**இ.ம.எண்.03/2022 இன் அ.வ.எண்.401/2022**

பொள்ளாச்சி தாலூக்கா, மன்னூர் அஞ்சல், R.கோபாலபுரம், சுங்கம், மெயின் ரோடு, எண்.143 & 143–A என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 50 வயதுடைய திரு.பழனிச்சாமி மகன் திரு. P.ஆனந்தன்.

.... மனுதாரர் / வாதி

/ எதிர் /

பொள்ளாச்சி தாலூக்கா, மன்னூர் அஞ்சல், R.கோபாலபுரம், சுங்கம், மீனாட்சிபுரம் (சாலை), குமார் மருந்துக்கடை என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 65 வயதுடைய திரு.பாலகிருஷ்ணன் மகன் திரு.ராஜ்குமார்.

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு மனு சொத்துக்களின் பௌதீக தன்மையை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 03.11.2022.

இம்மனுவானது கடந்த 15.07.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ஜம்புலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## இறுதி உத்தரவு

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு வழக்கறிஞர் **திரு. K.K.தியாகராஜ், MS.No.3620/2010** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் இருதரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்து தாலூக்கா நில அளவையர் உதவியுடன் மனுச்சொத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.10,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி, நீதிமன்ற ஆணையரின் ஊதியமான ரூ.10,000/- மனுதாரரும், எதிர்மனுதாரரும் தலா ரூ.5000/-த்தை வரும் 09.08.2024 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க: 09.08.2024.

## சொத்துவிபரம்

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், இராமபட்டணம் கிராமம் புலத்தில் 151 நெ. பட்டா க.ச.49/2 நெ.காலை பு.ஏ.19.13 இதில்,

பொள்ளாச்சி பாலக்காடு ரோட்டுக்கும் ... தெற்கு,

என்.வி.கோபால், என்.வி.முத்துராஜ்
ஆகியோர் வீட்டுக்கும் ... கிழக்கு,

ஜி.எம்.மனோகரன் பட்டா பூமிக்கும் ... வடக்கு,

அங்கமுத்து செட்டியார் வீட்டுக்கும் ... மேற்கு

இதன் மத்தியில்,

கிழமேலடி வடபுறம் - 17 1/4

தென்புறம் - 19

மத்தியில் - 18

தென்வடலடி கிழபுறம் - 70

மேல்புறம் - 71

இந்த அளவுகள் கொண்ட 1269 சதுரடிக்கு 117.90 சதுரமீட்டர் விஸ்தீரணமுள்ள இடமும், மேற்படி இடத்தில் 839 சதுரடிக்கு 77.94 சதுரடி மீட்டரில் கட்டப்பட்டுள்ள கிழக்குப் பார்த்துக் கட்டியுள்ள வில்லை வீடும். பின்னும் 163 சதுரடிக்கு 15.14 சதுர மீட்டரில் வடக்கு பார்த்துக் கட்யுள்ள ACC சிமெண்ட் ஷீட் வீடும், இவைகளைச் சேர்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பும், முன்பின் வாசல் புறவடை வகையறராவும், மேற்படி வீட்டிற்கு S.C.Nos. 03-392-005-165, 03-392-005-248ன் படி இணைத்துள்ள மின் இணைப்புகளும் அதன் டெபாசிட் தொகைகள் மற்றும் உபகரணங்கள் வகையராவும், மேற்படி வீட்டிற்கு இணைந்துள்ள குடிநீர்க் குழாய் இணைப்பும் அதன் டெபாசிட் தொகை மற்றும் உபகரணங்கள் வகையறாவும், லெட்டின் பாத்ரூம் வகையராவும், மேல்புற சுவற்றில் பொதுவில் சரிபாதியும் மேற்படி சொத்துக்கு என்.வி.கோபால், என்.வி.முத்துராஜ் கிரயம் பெற்றுள்ள வீட்டுக்கும் மேல்புறம், கிழமேலடி தென்புறம் 4 அடி வடபுறம் 3 1/2 அடி, தென்வடல் 71 உள்ள பொது தடத்தில் தென்வடலாக சென்று தென்கோட்டில் கிழமேலாக போகவர உண்டான தடபாத்தியமும் சகிதம். கதவு எண் 5/50ல் ஓர் பாகம். வரி விரிப்பு எண் 256ல் ஓர் பாகம். புதிய கதவு எண் 5/51. தற்போது புதிய கதவு எண் 2/143 வரிவிதிப்பு எண் 550.

மேற்படி சொத்துக்கள் தற்போது பட்டா எண் 443 க.ச.49/2A2 நெ.பு.ஹெக்.0.02.0க்கு ஓர் பாகமாக கட்டுப்பட்டது.

இவ்வுத்தரவு 2024ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

------------------------------------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

இ.ம.எண்.03/2022 இன் அ.வ.எண்.401/2022

நாள் : 25.07.2024

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

----------------------------------------------------------